JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.256/2019
PW.8

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மீராசுந்தரி | தாலுகா | கடையநல்லூர் |
| கணவர் பெயர் | முருகன் | தொழில் | பீடிசுற்றும் வேலை |
| கிராமம் | சாம்பவர்வடகரை | வயது | 44 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 21.05.2026

(2ம் எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது சாம்பவர்வடகரையில் குடியிருந்து வருகிறேன். நான் பீடிசுற்றும் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. 1வது எதிரி துரைபாண்டியை தெரியும். அசா.1 முருகன் என் கணவர். அசா.2 மாரியப்பன், அசா.3 தெய்வநாயகம்,அசா.4 கார்த்திக், அசா.5 கணேசன், அசா.6 மணிகண்டன், அசா.7 ஐஸ்வர்யா ஆகியோர்களை தெரியும். வழக்கில் இறந்து போன சுப்பிரமணியன் என்ற சமுத்திரம் என்பவரை தெரியும். சாட்சிகள் ராஜகோபால் மற்றும் செல்லதுரை ஆகியோர்களை தெரியும். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 9 வருடங்களுக்கு முன்பு என் கணவரை வேலைக்கு துரைபாண்டி கூப்பிட்டார். என் கணவர் வரவில்லை என்றும் என்னை மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாக கூறினார். துரைபாண்டி என் வீட்டிற்கு வந்து வண்டியில் என் கணவரை அழைத்து சென்றார். சாப்பாடு நேரத்தில் நான் போன் செய்து பார்த்தேன். போனை எடுக்கவில்லை. பின்னர் மாலை நேரம் எனக்கு போன் வந்தது. என் கொழுந்தன் மணி எனக்கு போன் செய்து அண்ணன் கீழே விழுந்து விட்டதாக சொன்னார். பின்னர் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். என் கணவர் 40 நாட்களுக்கு மேல் சிகிச்சையில் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.256/2019
PW.7

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஐஸ்வர்யா | தாலுகா | கடையநல்லூர் |
| கணவர் பெயர் | வினேக்ராஜா | தொழில் | இல்லத்தரசி |
| கிராமம் | சாம்பவர்வடகரை | வயது | 34 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 21.05.2026

(2ம் எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது சாம்பவர்வடகரையில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். நான் ஆஜர் எதிரியை பார்த்ததில்லை. என் அப்பா எதிரியின் தோட்டத்திற்கு வேலைக்கு சென்றதாக கூறினார்கள். 1வது எதிரி துரைபாண்டியை தெரியும். வழக்கில் இறந்து போன சுப்பிரமணியன் என்ற சமுத்திரம் என் அப்பா. அசா.1 முருகன், அசா.2 மாரியப்பன், அசா.3 தெய்வநாயகம்,அசா.4 கார்த்திக், அசா.5 கணேசன், அசா.6 மணிகண்டன் ஆகியோர்களை தெரியும். சாட்சிகள் ராஜகோபால், செல்லதுரை ஆகியோர்களை தெரியும். 29.08.2017ம் தேதி நான் அப்போது சென்னையில் இருந்தேன். எனக்கு என் வீட்டில் இருந்து போன் செய்து அப்பா இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள். கிணற்றில் வேலை பார்க்கும் போது வீஞ் பெட்டியோடு விழுந்து விட்டதாக கேள்விப்பட்டேன். என்அப்பாவை பிரேத பரிசோதனை எல்லாம் முடிந்து பாத்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.256/2019
PW.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | தாலுகா | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | செல்லப்பா | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | சாம்பவர்வடகரை | வயது | 37 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 21.05.2026

(2ம் எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது சாம்பவர்வடகரையில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. 1வது எதிரி துரைபாண்டி என்பவரை தெரியாது. வழக்கில் இறந்து போன சுப்பிரமணியன் என்ற சமுத்திரம் என்பவரை தெரியாது. அசா.1 முருகன் என் அண்ணன் முறை. அசா.2 மாரியப்பன், அசா.3 தெய்வநாயகம், அசா.4 கார்திக், அசா.5 கணேசன் ஆகியோர்களை தெரியாது. கடந்த 29.08.2017ம் தேதி முருகனை தென்காசி அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக எனக்கு போன் வந்தது. நான் சென்று பார்த்த போது போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். முருகனுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னிடம் பெயர், ஊர் கேட்டு விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.256/2019
PW.5

| பெயர் | கணேசன் | தாலுகா | கடையநல்லூர் |
|---|---|---|---|
| தந்தை பெயர் | சுப்பிரமணியன் என்ற சமுத்திரம் | தொழில் | டிரைவர் |
| கிராமம் | சாம்பவர்வடகரை | வயது | 45 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 21.05.2026

(2ம் எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது சாம்பவர்வடகரையில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. நான் பார்த்ததில்லை. எதிரி துரைபாண்டி என்பவரை தெரியும். வழக்கில் இறந்து போன சுப்பிரமணியன் என்ற சமுத்திரம் என் தகப்பனார். அசா.1 முருகன், அசா.2 மாரியப்பன், அசா.3 தெய்வநாயகம், அசா.4 கார்த்திக் ஆகியோர்களை தெரியும். சாட்சிகள் ராஜகோபால், செல்லதுரை ஆகியோர்களை தெரியும். கடந்த 29.08.2017 அன்று என் அப்பா வேலைக்கு சென்ற இடத்தில் வீஞ்சு அறுந்து தலையில் விழுந்து இறந்து விட்டதாக என் தம்பி கார்த்திக் கூறினார். நான் உடனே குத்துக்கல் வலசையில் உள்ள தோப்பிற்கு சென்று என் அப்பாவை பார்த்தேன். என் அப்பா இறந்து விட்டார். மாரியப்பன், தெய்வநாயகம் என்ற ராஜ், கோபால் ஆகியோர்களுக்கு காலில் அடிபட்டிருந்தது, முருகனுக்கும் அடிபட்டிருந்தது. பின்னர் என் அப்பாவை நான் சவக்கிடங்கில் வைத்து பார்த்தேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.256/2019
PW.4

| பெயர் | கார்த்திக் | தாலுகா | கடையநல்லூர் |
|---|---|---|---|
| தந்தை பெயர் | சுப்பிரமணியன் என்ற சமுத்திரம் | தொழில் | டெய்லர் |
| கிராமம் | சாம்பவர்வடகரை | வயது | 41 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 21.05.2026

(2ம் எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது சாம்பவர்வடகரையில் குடியிருந்து வருகிறேன். நான் டெய்லராக வேலை செய்து வருகிறேன். துரைபாண்டி வேலைக்கு அழைத்து சென்றவர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் அப்பா ஆஜர் எதிரியின் தோட்டத்திற்கு துரைபாண்டியுடன் வேலைக்கு சென்றார். அசா.1 முருகன், அசா.2 மாரியப்பன், அசா.3 தெய்வநாயகம் ஆகியோர்களை எனக்கு தெரியும். சாட்சி ராஜகோபால், செல்லத்துரை ஆகியோர்களை தெரியும். வழக்கில் இறந்து போன சுப்பிரமணியன் என்ற சமுத்திரம் என் அப்பா. கடந்த 29.08.2017ம் தேதி கிணற்று வேலைக்காக கோமதிநாயகம் கிணற்றிற்கு சென்றார். எனக்கு ஒரு நபர் போன் மூலம் என் அப்பா இறந்து விட்டதாக தகவல் சொன்னார். உடனே நான் கோமதிநாயகம் தோட்டத்திற்கு சென்று என் அப்பாவை பார்த்தேன், என் அப்பா சம்பவ இடத்திலேயே இறந்து கிடந்தார். பின்னர் என் அப்பாவை தென்காசி அரசு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு எடுத்து வந்தனர். மூன்று நபர்களுக்கு காலில் அடி என்றும் ஒரு நபருக்கு கண்ணிற்கு மேல் வெட்டு என்றும் கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.256/2019
PW.3

| பெயர் | தெய்வநாயகம் | தாலுகா | கடையநல்லூர் |
|---|---|---|---|
| தந்தை பெயர் | அற்புதமணி | தொழில் | கிணறு வெட்டும் வேலை |
| கிராமம் | சாம்பவர்வடகரை | வயது | 39 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 21.05.2026

(2ம் எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது சாம்பவர்வடகரையில் குடியிருந்து வருகிறேன். நான் கிணறு வெட்டும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நாங்கள் வேலை பார்த்த கிணற்றுகாரர். எதிரி துரைபாண்டி என்பவரை தெரியும். அவர் தான் எங்களை வேலைக்கு அழைத்து சென்றவர். அசா.1 முருகன், அசா.2 மாரியப்பன் ஆகியோர்களை தெரியும். எங்களுடன் வேலை பார்த்தவர்கள். சாட்சிகள் ராஜகோபால் செல்லதுரை ஆகியோர்களை தெரியும். 29.08.2017ம் தேதி மாரியப்பன், சமுத்திரம், ராஜகோபால், முருகன் மற்றும் நானும் கிணற்று வேலைக்காக கோமதி நாயகம் கிணற்றிற்கு துரைபாண்டி எங்களை அழைத்து சென்றார்.ஏற்கனவே பெட்டி சரியில்லை எனவும் வழிபாதையை சரிசெய்து தாருங்கள் எனவும் துரைபாண்டி மற்றும் எதிரியிடம் சொல்லி இருந்தோம்.அவர்கள் எதுவும்செய்யவில்லை. இருப்பதை வைத்து வேலை செய்யுங்கள் என்று கூறிவிட்டனர்.

சாப்பிட மதியம் மேலே வருவதற்கு வந்தோம். நாங்கள் 5 பேரும் பெட்டியில் ஏறி வந்தோம். மேலே வரும் போது பெட்டி அறுந்து விட்டது. அதில் சமுத்திரம் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். ராஜகோபால்மற்ற நபர்களுக்கும் பலத்த காயம் ஏற்பட்டது. எனக்கு வலது கால் முட்டியில் எலும்பு கிடையாது. மேல் வரை பிளேட் வைத்துள்ளேன். பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் தென்காசி அரசு மருத்துவமனைக்கு எங்களை அழைத்து வந்தார்கள். நான் தென்காசியில் ஒரு நாள்

சிகிச்சையில் இருந்தேன். பின்னர் என்னை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு இரண்டு நாட்கள் சிகிச்சை எடுத்த போது பின்னர் தனியார்மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றுவிட்டேன். சுப்பிரமணியன் என்ற சமுத்திரம் இறப்பிற்கும், எனக்கு காயம் ஏற்பட்டதற்கும் கோமதிநாயகம் மற்றும் துரைபாண்டி தான் காரணம். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.256/2019
PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரியப்பன் | தாலுகா | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | ராமையா | தொழில் | கிணற்று வேலை |
| கிராமம் | சாம்பவர்வடகரை | வயது | 50 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 21.05.2026

(2ம் எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது சாம்பவர்வடகரையில் குடியிருந்து வருகிறேன். நான் கிணற்று வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரி துரைபாண்டி எங்களை வேலைக்காக ஆஜர் எதிரியின் வீட்டிற்கு கூட்டி சென்றார். அசா.1 முருகன் என்பவரை தெரியும். சாட்சிகள் தேவநாயகம், செல்லதுரை, ராஜகோபால் ஆகியோர்களை தெரியும். வழக்கில் இறந்து போன சுப்பிரமணியன் என்ற சமுத்திரம் என்பவரை தெரியும். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 2017ம் வருடம் நான், முருகன், ராஜகோபால், சமுத்திரம், தெய்வநாயகம் ஆகியோர்கள் கிணற்று வேலைக்காக துரைபாண்டி எங்களை கோமதி நாயகம் வீட்டிற்கு அழைத்து சென்றார். அப்போது 1மணியளவில் நாங்கள் பெட்டி எதுவும் சரியில்லை. மாற்றி கொடுங்கள் என ஒரு நாளுக்கு முன்பு துரைபாண்டியிடம், தெய்வநாயகத்திடமும், எதிரி கோமதிநாயகத்திடமும் சொன்னோம். சரி நாங்கள் பார்த்து தருகிறோம் என சொன்னார்கள். நீங்கள் இன்றைக்கு வேலை பாருங்கள் என கூறினார்.

அப்போது 1மணியளவில் பெட்டி சரியில்லாமல் இருந்தது, கயிறும் சரியில்லாமல் இருந்தது, அதனால் கட்டாகி விட்டது. சமுத்திரம் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். முருகனுக்கு காலில் முறிவு ஏற்பட்டது. தெய்வநாகயத்திற்கும் பிட்டியில் அடிபட்டது. ராஜகோபாலுக்கு காலில் அடிபட்டது. என்னுடைய வலது கால் மற்றும் இடது கையில் காயம் ஏற்பட்டது. இடது கையை என்னால் சரியாக தூக்க முடியாது. அதில் முறிவு ஏற்பட்டது. எனக்கு வாய்க்கு கீழும் வெட்டு ஏற்பட்டது. பின்னர்

ஆம்புலன்ஸ் மூலம் தென்காசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர் அங்கிருந்து என்னை திருநெல்வேலிஅரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். எனக்கு காயம் ஏற்பட்டதற்கும், சுப்பிரமணி என்ற சமுத்திரம் இறப்பிற்கும் கிணற்றுக்காரர் கோமதியும், துரைபாண்டியும் தான் காரணம். நாங்கள் பழுது செய்து கேட்டும் செய்து கொடுக்காததால் எங்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.256/2019
PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | தாலுகா | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | செந்தில்வேல் | தொழில் | கிணற்று வேலை |
| கிராமம் | சாம்பவர்வடகரை | வயது | 54 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 21.05.2026

(2ம் எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது சாம்பவர்வடகரையில் குடியிருந்து வருகிறேன். நான் கிணற்று வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவருடைய கிணற்றில் நான் வேலைக்கு செல்வேன். 1வது எதிரி துரைபாண்டி என்பவரை எனக்கு தெரியும். அவர்தான் என்னை வேலைக்கு அனுப்பியவர். அவர் இறந்து விட்டார். சாட்சிகள் ராஜகோபால், மாரியப்பன், தேவநாயகம், செல்லதுரை ஆகியோர்களை எனக்கு தெரியும். 29.08.2017 ம் தேதி கிணற்று வேலைக்கு நானும், ராஜகோபால், மாரியப்பன், ராஜ், சுப்பையா ஆகியோர்களுடன் வேலைக்கு சென்றிருந்தேன். வழக்கில் இறந்து போன சுப்பிரமணியன் என்ற சமுத்திரம் எனக்கு தெரியும். அன்றைய தினம் மதியம் 1மணியளவில் நாங்கள் கிணற்று வேலை பார்த்து கொண்டிருந்தோம். அப்போது கிரேன் பெட்டி கட் ஆகி கீழே விழுந்து விட்டது. அந்த கிரேன் பெட்டியில் நான், ராஜகோபால், சமுத்திரம், மாரியப்பன், ராஜ் ஆகியோர்கள் இருந்தோம். கிரேன் பெட்டி கட் ஆகி கீழே விழுந்ததில் எனக்கு என்னுடைய வலது காலில் வெட்டு ஏற்பட்டது. சமுத்திரம் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். ராஜகோபாலுக்கு காலில் அடிபட்டு எலும்பு முறிவு ஏற்பட்டது. மாரியப்பனுக்கும் கால் மற்றும் தொடையில் அடிபட்டது. ராஜிக்கும் காலில் அடிபட்டது.

பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் எங்களை தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் ஒன்றரை மாதங்கள் தென்காசி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். நான் சிகிச்சையில் இருந்த போது போலிசார் அங்கு வந்தார்கள். நடவடிக்கை

எடுக்க அவரிடம் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் வாக்குமூலம் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு அடிபட்டதற்கும், சுப்பிரமணியன் என்ற சமுத்திரம் இறந்ததற்கும் துரைபாண்டி மற்றும் பிரம்மநாயகம் காரணம். எதனால் அவர்கள் காரணம் என்றால் அந்த பெட்டியை வேலை பார்த்து தரசொன்னோம். வேலை பார்த்து தருகிறேன் தருகிறேன் என சொன்னார்கள். ஆனால் வேலை பார்த்து தரவில்லை. அந்த பெட்டி மோசமாக தான் இருந்தது. போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi